# ஆத்ம ஜோதி



ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகள்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 7 | மன்மதஹூ ஐப்பசி 1 ங்உ (18-10-55) | சுடர் 12 |
| --- | --- | --- |


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | ஸ்ரீ மகாதேவ பதிகம் | 353 |
| 2 | ஸ்ரீ மகாதேவ அஷ்டகம் | 354 |
| 3 | தானே தனக்குப்பகைவனும் நட்டானும் | 355 |
| 4 | சமஸ்கிருதம் கற்கவேண்டும் | 357 |
| 5 | ஸ்ரீ மகோதேவ சுவாமிகள் சமாதி | 358 |
| 6 | வேண்டப்படுவது வெற்றி மனப்பான்மை | 360 |
| 7 | திருமுறைக் காட்சிகள் | 361 |
| 8 | கொள்கைக் குன்று | 367 |
| 9 | ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் | 370 |
| 10 | தாயோடு அளாவல் | 375 |
| 11 | நானும் என் குருநாதரும் | 377 |
| 12 | செய்தித் திரட்டு | 381 |
| 13 | தியானநிலையில் சமாதியானார் | Cover Third Page |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]



# ஸ்ரீ மகாதேவ பதிகம்

விஞ்ஞான நூல் கொண்டே ஈசன் தன்னை
விளங்குலகத் தெங்குளனென் றுராய்கின்ற
அஞ்ஞானம் நனிநிறைந்த எம்மனோர்பால்
அருள்கொண்டே ஆதாரம் நன்குகாட்டி
மெஞ்ஞானம் போதித்தே மாயை நீக்கி
மேன்மைதந்த வித்தகனே குருவேஉன்னை
எஞ்ஞான்றும் மறவாத இதயமீவாய்
ஈயாக்கா லென்செய்வே மேழையேமே.

எக்காலத் தாயினுமிங் குண்டேயென்றும்
இல்லையென்றும் வசனிக்க இயலாமாயை
முக்காலத் தினுமில்லை; எம்மனோர்முன்
முன்னுதனு கரணமொடு புவனபோகம்
இக்காலந் தோற்றுவது கயிற்றிற்பாம் பே
இருங்கானல் நீரென்றே ஏதுகாட்டி
மிக்கார்வத் தோடுரைத்து விளங்கவைக்கும்
வித்தகனே குருமணியே மெய்ம்மை யோனே.

சுரும்பாரத் தேன்பிலிற்றி மணங் கான்றோங்கு
தூயவெண்டா மரையுறையுந் தொல்லோனோடு
பெரும்பாரப் பொருப்பெடுத்தே ஆயர்தம்மைப்
பேணியசீர் மாயோனும் மௌலியோடங்
கிரும்பாதம் விண்பறந்தும் புவியுங்கீண்டும்
எங்கேனு மறியாத இறைவ னீர்மை
கரும்பார்ந்த மொழிகொண்டே பணிவோர்க் கென்றுங்
காட்டிடுசற் குருமணியே கருணைக் குன்றே.

உத்தமர்கள் நாவாரப் புகழ்ந்து போற்றும்
உயர்ஞான கன்கரத்தின உரவோன்காட்ட
நித்தியசிற் சொரூபத்தின் நீர்மைதன்னை
நீள்விசும்பும் மண்ணகமும் நெடிதுபோற்றத்,
தத்துவத்தின் ஆராய்வாற் றாமேகண்ட
தன்மையனே சாந்தவடி வாயமூர்த்தி
சத்தியனே மகாதேவமணியே உந்தன்
சரணமே கதியாகச் சார்ந்துளோமே

# ஸ்ரீ மஹாதேவ அஷ்டகம்

பூவிலயன் மாலேனோர் போற்றுசற் புருடரோடு
மேவியதொடர் பினர்த்த மிகுமயித் திரியினேனே
தாவியல் துயரமேவிச் சஞ்சலப் படுவோர் தம்பான்
மாவியல் கருணை காட்டும் மகாதேவ குருவே போற்றி.

அரும்பொருள்பொதிந்த நூல்கள் அறைந்தபுண்ணியத்தில்யாதும்
விரும்பியே புரிவோர்தம்பால் வேண்டிடு முதிதத்தோனே
கருந்தொழிற் தீயோர்மாட்டுக் காய்தலோ டுவந்தல் நீக்கி
வருந்திற லுபேட்சையோனே மகாதேவ குருவே போற்றி

நவிலும்வா சனையின்மற்று நசிவொடு மனசுயாக்கும்
சவிதரு புந்திதூய்தாய்ச் சார்ஞான ரட்சையோனே.
கவின்மனம் பொறிகளைந்தும் கருதிட ஏகமாகக்
குவிதரத் தவத்தின்வைகும் மகாதேவ குருவே போற்றி.

ஞானிலந் தனக்குமேலாம் நல்வழி யென்றுங் காட்டும்
ஞானியென் றறவோர்யாரும் நயக்கும் சம்வாதத்தோனே
மேனிலை அருளல்நோக்கி விரும்பிடு புவியினேடு
வானிடம் புகழும் மேன்மை மகாதேவ குருவே போற்றி.

காசறு குரோதமின்மை கருதுமைம் பொறியடக்கல்
ஏசறு வயிராகத்தோ டிசைசமை தமையி னேனே
ஆசறு பெரியோர்வைகும் அருஞ்சபை தன்னிலென்றும்
மாசறு விருப்பின்மேஷம் மகாதேவ குருவேபோற்றி.

சீவரின் மேன்மைநோக்கும் தெய்விக அலோபத்தோடு
ஏவரும் விரும்பியாங்கே ஈந்திநுங் கொடையினேனே
தாவரு மபயத்தோடு தகுநிரு மிதமாந்தன்மை
மாவரு ளோடுமன்னும் மகாதேவ குருவேபோற்றி.

அருஞ்சரோ ருகம்போலென்றும் அணிமுகம் நகையேமல்கப்
பொருந்துசந் தர்ப்பந்தோறும் உவமைகள் புகுத்துவோனே
இருஞ்சபை தோறுஞ்சென்றங் கேற்பன வாய்ந்துதேவர்
மருந்தெனப் பிரசங்கிக்கும் மகாதேவ குருவேபோற்றி.

நாடொறு மட்டகத்தை நயர்ந்துணர்ந் தோது வார்க்கே
பீடுறு மீரிரண்டு சாதனம் மருவப்பின்னே
நீடுறு நிசசொருப நிலைமையை உணரும் மோட்சம்
கூடுற அருள்பாலிக்கும் மகாதேவ குருவேபோற்றி.

# தானே தனக்குப் பகைவனும் நட்டானும்

—[ஆசிரியர்]—

வாழ்வில் நேரிடும் கஷ்டங்கள், தொல்லைகள், துயரங்களின் காரணத்தை தம்மிடத்தே ஆராய்ந்து பார்க்கும் பெருங்குணம்இன்று அருகி வருகின்றது. அதனைப் புறத்தேயே தேடிக்காட்டத்தெண்டிக்கும் மனப்பான்மை பெருகியுள்ளது. வாழ்வின் கீழ் நிலைக்கு முழுப் பொறுப்பையும் தெய்வத்தின் தலையில் சுமத்துபவர்கள் அநேகர். பெற்றோர், உற்றோர் உறவினரே காரணமென்பர் சிலர்; அந்நியர் அயலார்தான் காரணம் என்பவர் பலர். ஆனால் தமது சொந்தக்கர்மத்தை நன்கு ஆராய்ந்து தங்கள் இன்றைய நிலைக்கு நேற்றைய எண்ணமும் கர்மமுமே காரணமென்ற உண்மையை ஏற்றுக்கொள்பவர் மிக மிகச் சிலரே. கல்வி பயிலும் இளம் பிராயத்தை வீணில் கழித்து வாலிபத்தில் சோம்பேறியாய் வளர்ந்துவிட்டு வயோதிபத்தில் வறுமைப்படும்போது தலைவிதியை நோவதில் பிரயோசனமில்லை. நேற்றைய மதியே இன்றைய விதியாகும்.

மனிதன் தன் வாழ்வில் மாத்திரமல்ல. சமுதாய வாழ்விலும், ஓர் நாட்டின் சமய வாழ்விலும், சாம்ராஜ்ய வாழ்விலுங்கூட, எடுத்ததற்கெல்லாம் பிறரையே. முக்கியமாக நெருங்கிய அயலாரையே, எல்லா அல்லல்களுக்கும் காரண பூதர்களாக்கி அவர்களைத் திட்டும் முறை இன்றைய உலகில் ஓர் தொற்றுநோய் போல் பரவி விட்டது. ஒத்துவாழ்வதற்கு அத்தியாவசியகமான அன்பைப்பேணாமல், சகிப்புத்தன்மையைச் சாதனையிற் கொணராமல், தம்மினத்தாரிடம் மலிந்து கிடக்கும் குற்றங்குறைகளைச் சற்றேனுஞ் சிந்திக்காமல், அந்நியரைத்திட்டுவது அறிவிலித்தனமாகும். இது வரையில் உலகில் தோன்றிய நாகரிகங்களின் வளர்ச்சி, தளர்ச்சி, வீழ்ச்சி மூன்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்தால், மொத்தம் பத்தொன்பதில் பதினாறு நாகரிகங்கள் தற்கொலை செய்து கொண்டனவேயன்றிகொலைசெய்யப்படவில்லையென்ற உண்மை தெளிவாக விளங்கும்.

ஒரு சில உதாரணங்களை எடுப்போம். அசோகச்சக்கிரவர்த்தியின் காலத்தில் உலகெங்கும் பரவிப் புகழ் படைத்திருந்த பௌள

த்தமதம் தான் தோன்றிய இந்தியநாட்டிலேயே இருந்த இடந்தெரியாமல் மறைந்தது உட்பிரிவுகளாலும், பிணக்குகளாலும், பௌத்தபிக்குகளின் ஒழுக்கமற்ற வாழ்க்கையினாலுமேயாம். அதேபோல், புத்தபெருமான் வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, உலகின் நாலாபக்கங்களிலும் பரவியிருந்த சிவநெறி சீர் கெட்டு செல்வாக்கிழந்ததும் மேலே குறித்த காரணங்களினாலேயாம். பொலனறுவையில் சிறப்புற்றிருந்த தமிழரசாட்சி மறைந்தது தமிழ்மன்னர்க்கிடையே தோன்றிய போட்டி, பொறாமை, போர் காரணமாகவேயாம். தமிழர் தமிழரைக்காட்டிக்கொடுத்திராவிட்டால், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டியிருக்கமுடியுமா?

தமிழுக்கும் சைவத்திற்கும் அந்நியரால், அயலாரால் கேடுவரப்போகிறது எனக் கூச்சல்போடும் அரசியல் வாதிகள் முதலில் தங்களை நேர்மைஉள்ளவர்களாய், ஒழுக்க சீலர்களாய், ஆசைஆணவப்பேய்கட்கு அடிமைத்தனமற்றவர்களாய் வாழப்பழகவேண்டும். ஒழுக்கம், நேர்மை, சத்தியம், சகோதர நேயம் ஆகியவற்றைக்கடைப்பிடிக்கும் எந்த இனமும் கேடடையவே மாட்டாது எனவே ஆதிமனிதனும் தமிழன் தன் பழைய பண்பாட்டையும் சமதர்மத்தையும் பேணுவானாயின், பண்டுபோல் என்றும் உலகுக்கு உய்நெறி காட்டும் உயர்ந்த பதவியை வகிக்கவே செய்வான். இன்று தேவைப்படுபவை தன்னம்பிக்கை, தெய்வ நம்பிக்கை, அன்பு, இன ஒற்றுமை நான்குமேயாம். கீழ்க்கண்ட திருமூலர் வாக்கை, தமிழபிமானிகள் சிவநேயச்செல்வர்கள் சகலர்க்கும் ஓர் ஒப்பற்ற மந்திரமாக அர்ப்பணிக்கின்றோம்:—

தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே.

# சமஸ்கிருதம் கற்கவேண்டும்

[கனம் கே. எம். முன்ஷியின் பேருரை.]

பாரத நாடு பண்டைய நாட்களில், சரித்திர காலங்களில் எவ்வாறு இருந்தது, அதிலிருந்து நாம் அறியப் பெறுவது என்ன என்பதை இன்றையப் புதிய கல்வி முறை இளைஞர்களுக்கு உணர்த்தாமலிருப்பது, அவர்கள் அதையுணர்ந்து பாராட்டக் கற்பிக்கப்படாமலிருப்பதும் நமது துரதிஷ்டங்களில் ஒன்றாகும். நாட்டில் மறுமலர்ச்சி ஏற்படும்பொழுதும் மேலை நாட்டிலிருந்து சிறந்தனவற்றைக் கொள்ளும்போதும் எவ்வாறு நமது கால்களைப் பழமையில் ஊன்றி வைத்திருந்தோம், என்பதை இளைஞர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும். எனது நெடுங்காலக் கருத்துப்படி பழமையில் காலூன்றி நிற்காத ஒருநாடு இன்றைக்கு சிறப்புற வாழமுடியாது. சிறந்த உயர்ந்த வாழ்க்கையை வருங்காலத்தில் நிறுவவும் முடியாது. பழமை நமக்களிக்கும் உயர்ந்த உணர்ச்சியையும் உற்சாகத்தையும் உள்ளத்தில் பதித்துக்கொண்டால் மாத்திரமே, உலகமெல்லாம் பாரதத்தினிடமிருந்து எதிர்பார்க்கும் மகத்தான செயல்களைச் செய்ய முடியும்.

இத்தருணத்தில், சர்வ கலாசாலைப்பாடத்திட்டத்திலிருந்து சம்ஸ்கிருதம் மறைந்து வருவதை என்னால் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. இன்று கல்வியாளர்களுடைய உள்ளத்தில் ஒரு விதமான குழப்பம் நிலவி வருகிறது. அதாவது சமஸ்கிருதத்தைக்கற்பதும் கற்பிப்பதும் பிற்போக்கான செயல் என்றும் நவீனகாலப் போக்குக்கும் நாகரீகத்துக்கும் ஒவ்வாதது என்றும் கருதுகிறார்கள் ஆனால் படித்த மனிதர்களுக்கு சம்ஸ்கிருத அறிவும் ஆராய்ச்சியும் இன்றியமையாதன என்பதற்குக்காரணங்கள் யாவைஎன்பதை அவர்கள் மறக்கக்கூடாது. கடந்த 3000ஆண்டுகளாக இந்நாட்டில் ஒற்றுமையென்னும் பொற்சரடு இருந்து வந்ததென்றால் அது சம்ஸ்கிருதம் நமக்களித்ததுதான் என்பதை மறவாதீர்கள், ராணுவ ரீதியில் அமைப்பையும், ஒருவித நிர்வாக ஒற்றுமையையும் பிரிட்டிஷார் நமக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்நாடு முழுவதையும் ஒன்றாக ஆக்கும் ஒற்றுமையும், எல்லா நதிகளையும் புண்ணிய நகரங்களையும் நமதெனக்கருதக்கூடிய நோக்கும் இமயமுதல் குமரிவரை நாட்டை ஒன்றாகக்காணும் பண்பும், உணர்வும் சமஸ்கிருதமொழியிலிருந்தும் அது நிலை நிறுத்தி வந்துள்ள கலாசாரத்தினின்றும்தான் எழுந்தன. நமது உதிரத்தில் இது ஊறிவிட்டது. சமஸ்கிருத மொழி சிலர் கருதுவதுபோல வெறும் இரண்டாவது மொழியோ, இலக்கிய மொழியோ, செத்துப்போன மொழியோ அல்ல. நமது பண்பாட்டின் இறவாத மொழி அது, வேத காலத்துடன் இக்காலத்தைச் சேர்த்துப் பின்னும் பொன் நூலிழை இது.

---

# ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் சமாதி.

அக்காலந்தொட்டு இற்றைவரையில் இந்த யாழ்ப்பாணநாடு உண்மைத் துறவிகளையும் ஞானிகளையும் வித்துவான்களையும் கொண்டதென்ற பெருமையோடு கூடியதாகும். இக்காலத்திலும் நமது நாட்டிலே சில ஞானிகளும் யோகிகளும் இலைமறை காய்போல் இருக்கின்றார்கள். இவர்கள் தம்மைப் பிரசித்தப்படுத்துவதில் வெறுப்புடையவர்கள். இப்படியான சிறந்த துறவிகளுள் ஸ்ரீமத் மகாதேவசுவாமிகளும் ஒருவராய் இங்கே விளங்கினர். ஆனால். இந்த மகான் ஐப்பசி மாசம் 1942ம் ஆண்டு முப்பதாந் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழுமணியளவில் அவிட்ட நட்சத்திரத் திற் சமாதியெய்தினர். இப்படிப்பட்ட பெரியார் மறைவதையிட்டு நாம் இரங்குவதனால் ஆவதொன்றுமில்லை. இவர்கள் செயற்கரிய பெரிய கருமங்களை இங்கே செய்யும்படி உதித்தார்கள். "வினைதான் முடிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்றாங்கு. தாங்கள் வந்த கருமம் நிறைவேறிய அந்தக்கணமே மறைந்து விடுவார்கள். இப்பெரியாரிடத்துக் குடிகொண்டிருந்த அறிவாற்றல் ஞானம் முதலாகிய அரும் பெருங்குணங்களையும் செயல்களையும் இவருடைய சீர் வர்க்கத்தினரும் இவரோடு ஊடாடிய நல்லோருமே நன்கறிவர். இம்மகானிடத்துச் சைவ சித்தாந்தம் வேறு வேதாந்தம் வேறு என்று பேதம் பாராட்டும் இயல்பேயில்லையாகும் எவரெவர் எவ்வெக்கொள்கையை யுடையவர்களாய்த் தம்மிடம் வந்து உண்மையை அறிய வேண்டினரோ அவரவர்க்கு அவர்களுடைய பரிபக்குவத்திற்குத் தக்க உண்மையை அறியவேண்டினரோ அவரவர்க்கு அவர்களுடைய பரிபக்குவத்திற்குத் தக்க உண்மையை உபதேசித்து அவரை நன்னெறிப்படுத்தி வந்தனர்.

இப்பெரியார் இளம்பிராயத்திற்றானே தமிழ் மூதுரை கருவி நூல்கள் கந்தபுராணம் முதலிய புராணங்களைக் கிரமமாகப்பயின்று பின்னர்ச்சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும் வேதாந்த நூல்களையும் முறையே பயின்று வந்தனரென்ப. கேட்போர்க்குப் பக்திகனியும் படி திருக்கோயில் முதலிய தூய தானங்களிற் புராணபடனஞ் செய்து வந்தவர், சந்தியாவந்தனம், செபதபம், விரதங்காத்தல்

ஆலய வழிபாடு, தீர்த்த யாத்திரை, தலயாத்திரை என்னுஞ் சத்கருமங்களை நியதியோடு ஆற்றியவர். தேவியுபாசனையுடையவர். சைவத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டுமென்ற வேணவாப் பூண்டு கரம்பனில் சண்முகநாத வித்தியாசாலை யொன்றைத்தாபித்து இனிது நடைபெறச்செய்து, ஏனைய அபிமானிகளையும் ஊர்தோறும் சைவவித்தியாசாலைகளைத் தாபித்து நடத்தும்படி தூண்டியவர். சமய சம்பந்தமான பிரசங்கங்களை இனிமை வாய்ப்பச்செய்யும் ஆற்றல் பூண்டவர். இப்பெரியார் ஆற்றி வந்த தூயதொண்டுகள் இன்னும் பலவுள.

சென்ற 1911ம் ஆண்டு ஐப்பசி மாசத்திற் சற்குருவையடைந்து ஞானதீட்சை பெற்று இன்னும் மேலான நிலையில் ஒழுகி வந்தவர். 1916ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலேயே வண்ணார்பண்ணை கிழக்கிலுள்ள கந்தர் மடத்தடியில் சிவகுருநாத பீடமென்னும் வேதாந்த ஆச்சிரமத்தை நிறுவிப் பல மாணுக்கருக்குக் கல்வியறிவையும் சமய ஞானத்தையும் போதித்து வந்தனர். குறித்த சிவகுருநாத பீடத்துக் கருமங்கள் முட்டின்றி இனிது நடைபெறும் வண்ணம் அதற்காக வேண்டிய தென்னந்தோட்டம் முதலிய நிலங்களையும் தேடி வைத்துள்ளார். இப்பெரியாரிடத்துக் குடிகொண்ட மாசற்ற சொல்லும் முகத்தில் இயல்பாக விளங்கும் புன்சிரிப்போடு கூடிய தேசசும் எவரையும் வசீகரிக்கத்தக்கவை. இவருடன் பழகியவர்கள் பின் விட்டுப்பிரிதல் அரிதெனலாம். தாம் பிறர்க்குப் போதித்தவற்றைத் தாமும் சாதித்து வந்தமையினால் இப்பெரியார் எவராலும் பாராட்டப்பெற்று வந்தார்; யாழ்ப்பாணத்துள்ள துறவிகள்போல் இத்துறவியும் எவ்வகையான படாடோபமுமில்லாதவர். நித்தியப்பிரமசாரி. இவரையொப்பதோர் புண்ணியாத்மா இனியும் இந்நாட்டில் உதிக்குமோ என எண்ணிக்கவல வேண்டியிருக்கின்றது: ஆயினும், நாம்கவலையடையவொண்ணாது: ஏன்?" அறிவார் யார் நல்லார் பிறக்குங்குடி" என்பது ஆன்றோர்வர்க்கமாதலின் இம்மகானுடைய தூலதேகம் அடுத்த நாளாகிய திங்கட்கிழமை பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் சமுகத்தில் சிவகுருநாத பீடத்து முன்றிலில் சமாதி செய்யப்பெற்றது.

(19–11–42 இந்துசாதனத்திலிருந்து எடுக்கப்பெற்றது.)

———

# வேண்டப்படுவது வெற்றி மனப்பான்மை

—(சுவாமி அத்வைதானந்தர்)—

அரசியலும், மதமும் வேறு என்பதாகப் பலர் கூறுகிறார்கள் மதம் நல்ல முறையில் அமைந்துவிட்டால் அரசியல் எளிதாகிவிடுகிறது. நம் மதத்தின் பெருமைக்கே மூலமாக இருக்கும் ஸ்ரீராமரும், கிருஷ்ணரும் அரசியலிலே சாமர்த்தியம் அற்றவர்களாக இருந்தார்களா?

ஆகவே எவ்வெப்போது ஹிந்துக்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டு எழுந்துநின்று அந்நியரை எதிர்த்து நின்றிருக்கின்றனரோ, அப்போதெல்லாம் அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார். வெற்றி மனப்பான்மையும் உயர்வு மனப்பான்மையும் நம்மிடம் குடிகொண்டதாலேயே சங்கரர் போன்றவர் மாபெரும் காரியம் சாதிக்க முடிந்தது. ஆகவே இன்று நாம் நமது ஹிந்து சமுதாயத்திலிருந்து இந்த தாழ்வு மனப்பான்மையையும், தோல்வி மனப்பான்மையையும் ஒழித்து வெற்றி மனப்பான்மையுடன் வீறிட்டு எழச்செய்வது அவசியமாகிறது.

நமது தாய்தந்தையர் கோவிலுக்குச்சென்று தங்கள் தங்கள் சுய தேவைகளை கூறி அதற்காகப் பிரார்த்தனை செய்கிறார்களே தவிரசமுதாய எண்ணத்துடன் கூடுகிறார்களில்லை. ஆனால் சங்கத்தவராகிய நீங்களோ கொடிக்குமுன் நின்று பிரார்த்தனை செய்யும்போது ஹிந்து ராஷ்டிரத்தை தியானம் செய்து சமுதாயத்தை ஒன்றுபடுத்தும்பணியில் ஈடுபடுகிறீர்கள். இது மிகவும் போற்றத்தக்கது.

மதுரை ஒரு புண்ணிய ஸ்தலம் வானளாவிய கோபுரத்தைக்கொண்ட மீனாக்ஷி அம்மன் கோவில் யாத்ரீகர்களின் உறைவிடமாக மதுரையின் பெருமையை உயர்த்துகிறது. இக்கோவிலுக்குச்சொத்துக்கள் பல இருக்கின்றன. இங்கு வந்து கடவுளை வழிபட்டபின் உண்டியலில் காணிக்கையைச் செலுத்திவிட்டுத் தங்கள் காரியம் முடிந்ததெனச் செல்கின்றனர் எல்லோரும் இப்பேர்க்கொத்த செய்கை வேற்று மதத்தவனிடம் நாம் காண்கிறோமா? முகம்மதியன் தன் தெய்வத்தை வழிபட்ட பிறகுஇஸ்லாமியத்தின் வளர்ச்சிக்கு தன்னால் என்ன செய்யமுடியும் என எண்ணத்துவங்குகின்றான். மாதா கோவில் வழிபாடு செய்வதோடு நிற்காமல் தங்கள் மதம் பரவவேண்டி என்ன காரியங்களைச் செய்யலாம் எனச் சிந்திக்கத் துவங்குகின்றனர். அவர்களது சிந்தனையின் காரணமாக எழுந்தன —புதிய மசூதிகளும், மாதா கோவில்களும்; பள்ளிகளும், ஆஸ்பத்திரிகளும்; பல மதப் பிரச்சாரர்களும், ஆனால், செல்வம் படைத்தமதுரைக்கோவில் மதத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று மார்தட்டும் கோவில் இதுவரை 500 பிரசாரகர்களையாவது தயாரித்ததா? தயாரிக்கும் முயற்சியில்தான் இறங்கியதா? கோவில் தயாரிக்காதவற்றை சங்கம் தயார் செய்கிறது. போற்றுகிறேன்.

ஆகவே இன்றைய அவசரத்தேவை ஹிந்துமக்களிடையே ஹிந்து உணர்ச்சியைத்தட்டி எழுப்பி, வெற்றி மனப்பான்மை கொண்டவர்களாக ஆக்கிடச்செய்திட வேண்டியதே.

# திருமுறைக்காட்சிகள்.

—(முத்து)—

## உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்.

சமணச்சூழலிலே வெதும்பிய தருமசேனர் வெப்பம் தாங்க மாட்டாது சமணப்போர்வையைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். தமக்கையாரை அடைந்தார். சிவநாமத்தென்றல் வீசியது; அத்தென்றல் விபூதியாகிய மகரந்தங்களை உடலெல்லாம் தெளித்தது. அதனால் உடலும் உள்ளமும் குளிரப்பெற்றார். கொடியபாலைவனத்திலே நடுவெயிலிலே வருந்திய ஒருவனுக்கு ஒரு நிழல் மரம் கிடைத்தது. நிழல் மரத்தைக்கண்டவுடனே சந்தோஷத்தினால் வெயில்வெப்பம் எல்லாம் தணிந்து விட்டது போன்ற ஒரு உணர்ச்சி. ஆனால் நிழலில் போய் சிறிது ஆறிய பின்னர்தான் காலின் வருத்தமும் மேலின்சூடும் வருத்துவதை உணர்கிறான்.

இதுபோன்றே தருமசேனரும் சமண வெப்பத்துள் அழுந்தியவர். தமக்கையாரைக் கண்டதனாலே ஒரு மகிழ்ச்சி; சிவநாமத்தை ஓதக்கேட்டதினாலே ஒரு இன்பம்; விபூதி பூசப்பெற்றதினாலே ஒரு சந்தோஷம் இவையெல்லாம் ஒன்று சேரச்சமண வெப்பம் தணிந்தது போன்ற ஒரு உணர்ச்சி. அந்த நிமிஷத்திலேயே தமக்கையாரோடு எத்தனையோ ஆண்டுகளாகப் பிரிந்திருந்த திருவதிகை வீரட்டானேசுவரரைத் தரிசிக்கச் செல்கின்றார். பல சிவனடியார்கள் வந்து தரிசித்துச்சென்ற புண்ணியதலமல்லவா? அது. அந்த ஆத்மீக அலைக்குள்ளே அகப்படும்போது ஒரு ஆனந்த அநுபவம். எம்பெருமானைக்கண்ணாரக் கண்டார்; தாயை விட்டுப்பிரிந்து வருந்திய குழந்தையின் நிலையை ஒத்தார். வெகுநேரம் தாயை விட்டுப்பிரிந்து வருந்திய குழந்தை தாயைக் கண்டவுடனே சந்தோஷத்தினால் ஆடிப்பாடுகிற வழக்கமில்லை. மனத்திலே அடங்கிக்கிடந்த துக்கமெல்லாம் அழுகையாக மாறிவிடுகிறது.

இதே நிலையிலேதான் நாவுக்கரசப்பெருந்தகையும் தாயாகிய எம்பெருமானைப் பார்த்தார். எத்தனையாண்டுகள் பிரிந்திருந்தவர்; வாய்விட்டு அழத்தான் தோன்றியது; தமிழ்ப்பாடல்களாகவே அழுதார்; கல்மனமும் கசிந்துருகச்செய்யும் பக்திப்பாடல்களாகவே அழு

தார். எங்களுக்கும் புலவனுக்கும் இதுவே தான் வித்தியாசம். எங்கள் உணர்ச்சி கண்ணீராக வெளிவரும். புலவன் உணர்ச்சி பாட்டாக வெளிவரும். எங்களுக்கும் அழுகை உணர்ச்சி மேலிட்டால் அழாமல் இருக்க முடிவதில்லை, அதேபோல் புலவனுக்கும் பாடுகிற உணர்ச்சி எழும்பிவிட்டால் பாடாமல் இருக்க முடிவதில்லை. உண்மையான உணர்ச்சியோடு அழும்பொழுது பார்ப்பவர்கள் மனத்தையும் உருக்குகிறதல்லவா? உணர்ச்சி வசப்பட்டுப்பாடும் பாடல்களை மற்றவர்கள் பாடும்போதும் அந்த நிலையை அடைகிறார்கள். அதைத்தான் தெய்வப்பாட்டு என்பார்கள் சிலவேளை பாட்டுவரும் வேகத்தை எழுதுகிற வேகம் சமாளிக்க முடியாமல் திண்டாடும். இதே புலவனைச் சும்மா இருக்கும் நேரத்திலே ஒரு பாட்டுப்பாடித்தாரும் என்றால் அவனால் பாடமுடிவதில்லை, காரிகைகற்று மூலைதேடியிருந்து, எதுகையும் மோனையும் பார்த்துப்பாடி பல பண்டிதர்களால் சத்திரசிகிச்சை செய்யப்பெற்று வெளிவரும் பாடல்களும் அநேகம் உண்டு. அவைகள் தினசரிப்பத்திரிகை படும்பாடடைந்து, ''முந்தநாள் பெய்த மழைக்கு நேற்றுமுளைத்த கோரை'' என்பார்களே, அதே போன்று இருந்த இடமும் தெரியாது மறைந்து விடுகின்றன.

இன்றும் நாவுக்கரசுப்பெருமானின் தேவாரங்களை ஓதும் போது நாம் எல்லாம் அவர்நிலையை உணரமுடிகிறது. எம்பெருமானும் நாவுக்கரசுப்பெருமான் மூலம் பக்திப்பாடல்களை அநுபவிக்கவிரும்பினார் போலும்! சமண வெப்பம் ஓரளவு நீங்கியதாயினும் சூலைநோயின் கொடுமை முற்றாக நீங்கவில்லை. இதையும் நீக்கிவிட்டால் நாவுக்கரசருக்கும் பாடும் உணர்ச்சியும் நீங்கிவிடுமோ! யாரறிவார்? கூற்றுவனைப்போல வந்த இந்த நோயை ஆற்றேன் என்று எம்பெருமானிடம் முறையிட்ட நாவுக்கரசருக்குப் பூர்வ ஞானம் தெளிவாகிறது. முற்பிறப்பை உணர்கிறார். நாவுக்கரசர் முற்பிறப்பில் வாகீசமுனிவராக வாழ்ந்ததாக வரலாறு உண்டு. வாகீசமுனிவராக வாழ்ந்தபோது செய்த தவத்தின் குறையை நிவிர்த்தி செய்யவே நாவுக்கரசராக வந்தார். அதனை உணர்ந்தார். முனிவராக வாழ்ந்த காலத்துச் சிவபூசைசெய்தலில் எப்போதும் தவறாதவர். அந்த எண்ணம் தலை எடுத்த உடனே,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்"

என்றார். இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்தலையும், பூச்சாத்துதலையும், தூபம் இடுதலையும் ஒருக்காலும் மறந்திருந்ததாக அறியவில்லை என்பது பொருள். இப்பிறப்பிலோ ஒரு நாளாவது இன்றுவரை இக்கைங்கரியத்தைச் செய்தாரில்லை. அப்படியிருந்தும் மறந்தறியேன் என்று எவ்வளவு துணிவாகச் சொல்கிறார் பாருங்கள் ஞானிகளுக்கு முற்பிறவிகள் எல்லாம் வெகுதூரத்தில் இல்லை. அவர்கள் தமது உடலை நாம் சட்டை மாற்றுவதுபோல் மதிக்கும் தன்மை உடையவர்கள். நாவுக்கரசரின் இதே அடியை அநுவதிப்பதுபோல உள்ள திருமூலரின்பாடல் சிந்தனைக்குரியது.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள்புரியாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"

இறைவனார் தமிழுக்காகத் தூது நடந்தவரல்லவா? தமிழின் இனிமையை அநுபவித்தற்காகச் சங்கமேறித் தமிழாய்ந்தவரல்லவா? தமிழிசை கேட்டு பிழை செய்த இராவணனையும் மன்னித்தருளியவர் அல்லவா? அத்தகைய பெருமானின் திருவருளைப்பெறுவதற்கு இலகுவானவழி அவன் புகழைப்பாடுதலே என்று கொண்டனர் அடியார்கள். வாகீசரும் தமிழிசைப்பாடல் பாடியே எம்பெருமானைத் துதித்ததாக அறியக்கிடக்கின்றது. அதனால்தான்,

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"

என்கின்றார். தமிழோடு இசைந்த பாடல்களை நான்பாட மறந்ததாக அறியவில்லை என்பது இதன்பொருள். தமிழோடு இசைந்த பாடல்கள் தாம் மனத்தை உருக்கவல்லன என்றும், தமிழோடு இசையாத பாடல்களுக்கு அச்சக்தியில்லையென்றும், தமிழோடிசைந்தபாடல்களையே எம்பெருமான் விரும்பினார் என்றும் அறியக்கிடக்கின்றதல்லவா? நாவுக்கரசுப்பெருமான் காலத்திலேயே தமிழிலே அர்ச்சனைசெய்வதற்கு அநுபவமூலமாக பலமான ஆதரவு இருந்ததென்பதற்கு இது ஒரு சான்றாகும்.

உலகத்தில் ஒருசார் மனிதர் இருக்கிறார்கள். நன்மை நிகழும் போதெல்லாம் நான் இது செய்தேன். என்னுடைய கெட்டித்தன

த்தினால் அல்லவா? இது நிகழ்ந்தது என்கிறார்கள். அத்தருணத்திலே இறைவன் அவர்களை நல்வழிக்குக் கொணரக்கருதி அவர்கள் தலையிலே ஓங்கி ஒரு அடிபோடுகின்றான். அப்போ விழித்துப் பார்க்கிறார்கள். ஆண்டவனே உன்னையல்லால் நானில்லை என்று முறையிடுகிறார்கள். இன்னொரு சார் மனிதர் இருக்கிறார்கள். நன்மை நிகழும் போதெல்லாம் ஆண்டவனே ஆண்டவனே எல்லாம் உன் செயல் என்பார்கள். தீமை வந்தவுடனே இக்கக்கடவுளுக்குக்கண் இல்லையே என்று ஆண்டவனைக் குறைசொல்லத் தொடங்கிவிடுவார்கள். நன்மையும் சரி தீமையும் சரி எல்லாம் அவன் செயல் என்று உணரப்பெற்றே வாழவேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா? இதனையே நாவுக்கரசுப்பெருந்தகை.

"நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்"

என்கின்றார். நன்மை தீமையில் இரண்டிலும் உன்னை மறந்ததாகத் தெரியவில்லை என்கின்றார். வாகீசராக வாழ்ந்த காலத்து நலமேநினைந்து நலமே பேசி நலமே செய்து வாழ்ந்தார். தருமசேனராக வாழ்ந்தகாலத்து சூலை நோயால் துன்புற்றார் அல்லவா? அப்பொழுதெல்லாம் இறைவனை மறவாது வாழ்ந்தாராம். வெளித்தோற்றத்திலே சைவத்தை மறந்தவராகத்தோற்றினும் உள்ளத்திலே எப்பொழுதாவது மறந்தவரல்லவாம்.

உலகத்திலே பழக்கத்தைப்போல நல்லதும் இல்லை: கெட்டதும் இல்லை. மீன் விற்ற வலைச்சிகளால் ஒருநாள் இரவு பூக்கட்டியின் வீட்டிலே தூங்கமுடியவில்லை. காரணம் பூ மணம் அவர்களுக்குப்பழக்கமில்லை. மலத்திலே உள்ள புழுவை சுத்தமானசோற்றிலே விட்டபோது துடி துடித்து இறந்து விட்டது. காரணம்புதிய சுத்தத்தில் அதற்குப்பழக்கம் இல்லை. இதே போன்றுதான் எமது நாவையும் எதில் பழக்குகின்றோமோ அதில்தான் அது பயிற்சியுடையதாயிருக்கும். எமது மனத்தொடர்பு இல்லாமலே பழக்கத்தினால் சில வார்த்தைகளை நாஉச்சரித்துவிடுவதைப்பார்க்கின்றோம். அப்பர் சொல்லுகின்றார்.

"உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்"

உன்திருப்பெயரை என் நாவால் ஓதுதலையும் விட்டதாகத் தெரியவி வில்லை, என்பது இதன் பொருள்.

"ஒருமைக்கட் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து."

என்றவள்ளுவரின் குறள் சாட்சி கூறுகின்றது. ஒருபிறப்பிலே ஒருவன் கற்றகல்வி ஏழு பிறப்புகளிலும் சென்று உதவுதலை உடையது என்பது இதன்பொருள். வாகீசராய் இருந்தபோது ஓதிய பஞ்சாட்சரசெபம் இப்பிறப்பிலும் தொடர்ந்து வந்தமையை அறிந்த உடனே என்நாவில் மறந்தறியேன் என்கின்றார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஓரிடத்திலே

"நற்றவா உனை நான்மறக்கினும்
சொல்லுநா நமச்சிவாயவே"

என்கின்றார். எல்லா உயிர்களினதும் நன்மையைநாடுகின்றவரே உம்மை நான் மறந்தாலும் "நமசிவாய" என்னும்உமதுதிருவைந்தெழுத்தை என் நாக்கு எப்போதும் மறவாமல் சொல்லும் என்பது இதன் பொருள். நான் உன்னை மறந்து போகாமல் மனத்தைப்பற்றி நன்கு அறிந்தவரல்லவா? திருக்கைலாயத்திலே பூப்பறிக்கச்சென்றபோது அவரது உள்ளம் அவரையும் சிவபிரானையும் மறந்து அநிந்திதை கமலினியிடம் சென்றுவிட்டதல்லவா? அப்படிப்பட்டசந்தர்ப்பங்கள் இனிமேல் எத்தனை வந்தாலும் எனதுநா உமது நாமத்தை மறவாது என்கின்றார். நாவுக்கரசர் தருமசேனராக வாழ்ந்த காலத்தும் அவரது மனம் சமணப்பள்ளியில் உறங்கினாலும் நா பஞ்சாட்சரத்தையே ஓதி வந்திருக்கவேண்டும், ஆனபடியால்தான் உன் நாமம் என் நாவில் மறந்தறியேன். என்று ஆணையிட்டுக் கூறுகின்றார். சைவசித்தாந்த உண்மையின்படி இறைவனை அடைவதற்கு நான்கு படிகள் உள, அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நான்கு நிலைகளையுமே மறந்தவரல்லஎன்று நாவுக்கரசர் சொல்லாமற் சொல்லிவைக்கின்றார்.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் என்பது சரியையையும்,
தமிழோடிசைபாடல் மறந்தறியேன் என்பது கிரியையையும்,
நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் என்பது யோகத்தையும்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன் என்பது ஞானத்தையும்,

விளக்கி நின்றன.

அகங்காரத்தினால் இழந்த பிரமனது தலையோட்டிலே பிச்சை எடுத்துத்திரிகின்ற சிவனே எனது உடலிற்பொருந்திய சூலை

நோயை நீக்கியருளமாட்டீரா? பிரமனது தலையைப்பறித்ததனால் பிரமனுடைய அகங்காரத்தை நீக்கியதுமல்லாமல் அவன் படைப்பில் தோன்றிய ஜீவர்களது அகங்காரத்தையுமல்லவா? சிவபிரான் பலியேற்றுத்திரிகின்றார். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுடையவனல்லவா? இறைவன். ஜீவர்கள் முறையிடாதிருக்கவும் அவர்கள் அகங்காரத்தைப்பலியாக ஏற்றுக்கொள்கின்றானல்லவா? எங்கள் வீடுகளிலே பலி ஏற்க வருகிறவர்கள் உயர்ந்த பொருட்களைத்தான் பலியாக ஏற்பது மரபு. இவரோ எவரும் ஏற்கமறுக்கும் அகங்காரத்தையே பலியாக மனமுவந்து ஏற்றுக்கொள்ளுகின்றார். தேவரெல்லாம் கூடி அமிர்தம் கடைந்தகாலத்தில் பரமசிவன் மனமுவந்து ஏற்றுக்கொண்ட பொருள் நஞ்சு அல்லவா? மற்றையோரெல்லாம் அமிர்தத்தையே விரும்பினர். குழந்தைக்கு வருந்துன்பத்தைத் தாய்தானே ஏற்றுக்கொள்ளவேண்டும். தாயாகித்தந்தையாகி எம்மையெல்லாந்தாங்குகின்ற தெய்வம் பரமசிவனல்லவா? ஆனபடியால் நாவுக்கரசரும் தமது சூலை நோயைத்தீர்த்துக்கொள்ளும்படி வேண்டுகின்றார். எல்லா ஜீவர்களது துன்பத்தையும் உமதாக ஏற்றுக்கொள்ளும் பெருமானே எனது சூலை நோய் உமக்கு ஒரு பொருட்டா?

"உலந்தார் தலையிற்பலி கொண்டு முல்வாய்
உடல் உள்ளுறு சூலை தவிர்த்தருளாய்"

கெடிலநதிபாயும் திருவதிகையில் உள்ள திருவீரட்டானம் என்னும் கோயிலில் எழுந்தருளிய பெருமானே! இந்தச் சூலைநோயினால் அடியேன் எவ்வளவு துன்பமுற்றேன். என்று இறைவனிடம் முறையிடுகின்றார் நாவுக்கரசர் இப்போ அவரது முறையீட்டைக் கேளுங்கள்.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடல்உள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே."

# கொள்கைக் குன்று

—[கவிஞர் திருவாழ்மார்பன்]—

[தமிழகத்தின் தவப்பயன் மீண்டும் சிறந்த சமயத் தலைவரைத்தந்து விட்டது. கலையின் பெயரால்—மொழியின் பெயரால்—இனத்தின் பெயரால்-சமயத்தின் பெயரால் நம்மை ஒரு முகப் படுத்தி, நாத்திக நச்சுப்பாம்பை நசுக்க வந்த நல்லறிவாளர் அவர் சொல்லின் செல்வர்—இளந்துறவி-எழுச்சிமிகு இளைஞர் சமுதாயத்தைச் சமயத்தின் சமத்துவவழிச்செல்ல தொட்டிழுத்த "கொள்கைக்குன்று" குன்றக்குடி அடிகளார் என்ற தெய்வசிகாமணி அருணசலதேசிகர் அவர்கள்.]

அறிவுக்கனி குலுங்கும் சோலை. தமிழ்ப்பணிபடிந்த மலர்—கொஞ்சும் கிளி—கவிபாடும்குயில்—சீர்திருத்தச்செம்மல்—புவிக்குழைக்கும் பொதுநெறியாளர்—புன்மையை-புறட்டைப் பொசுக்கவந்த புதுமையாளர்-மதவாதிகளிலே ஓர் முன்னோடி-நடமாடும் பல்கலைக்கழகம் இன்னும் எப்படி வேண்டுமானாலும் அவரைப் போற்றலாம் புகழலாம்.

அவர் இந்த இருபதாவது நூற்றாண்டின் இளமைத்தலைவர்களிலே ஒருவர். நாட்டுக்கு நீதியைப் பகலிலே போதித்து வீட்டிலே விவேகமின்றி வெறும் மூட நம்பிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்பவர் அல்லர் அவர். அவர் எண்ணம்—எழுத்து—பேச்சு—செயல் எல்லாமே தூய்மையானது மனிதசமுதாயத்துயரை நீக்குவது.

பார்வைக்கு எளியர். அலுவலகத்திலே அவர் ஒரு அலுவலராகத்தோன்றுவார். அவரிடம் உள்ளத்தே ஏற்படும் ஐயங்களைக் கேட்கவேண்டும். அந்த ஊரிலே அப்படி ஏன் பேசினர் என்று விளக்கம் கேட்கவேண்டும் என்று துடி துடிக்கும் இளைய பல உள்ளங்கள் சூழ்ந்த இடம் அவர் வாழும் மடம்.

தாயின்றித் தவித்த தனயர்க்கு தாமே அருகிருந்து பருகப்பாலும்—பண்பொடு வாழப்போதனையும் தருபவர் அவர். திக்கின்றித்

தவித்த அனாதைக்குழந்தைகட்கு ஆதரவளித்த அருள்நெறியாளர் அவர். அவர் உள்ளம் பரந்தது-பண்பட்டது. அவர் சிந்தனை செம்மை பெற்றது—சீரியது.

இன்று ஒரு சிலருக்கு அவர் ஒரு புதிராக இருக்கலாம். ஆனால் அவர் ஆதீனப்பட்டத்து மண்டபத்திலே புகுந்த வேளை எத்தகையது என்பதைப்புரிந்து கொண்டவர்களுக்கு இது வியப்பல்ல—விளக்கமும் வேண்டுவதில்லை. நாட்டின் எத்திசையிலும் சமயத்திற்கு எதிர்ப்பு. மதம் மக்களுக்கு அபின். அது ஒடுக்கப்பட்ட பிராணியின் புலம்பல். அந்த மதத்தைவைத்து மதவாதிகள் பிழைக்கிறார்கள். இந்த மதம் வேண்டாம். கடவுள் கண்முன்னே தோன்றுவது இல்லை—எனவே கடவுள்—மதம் வேண்டாம் என்ற கூச்சல் ஒருபுறம்.

பசி, பஞ்சம், பட்டினிச்சாவு, தற்கொலை என்ற வறுமைப் பேயின் கோர தாண்டவம் ஒரு புறம். நான்கு அணாவுக்கு நாலு மாதக்குழந்தையை நடுத்தெருவிலே விற்றசெய்தி நாடெங்கும் நடமாடியது. இதுதான் அவர் பட்டத்து மண்டபத்தில் கால் எடுத்து வைத்தநேரத்தின் நிலைமை.

ஒரு காலைப்பட்டத்து மண்டபத்திலே வைத்தவர் சிந்தித்தார்! சிந்தித்தார்!! சிந்தித்தார்!!! பட்டம் கட்டிக்கொண்டு பண்பற்று மடம் தட்ட மடத்துள்ளே வாழ்வதா? மாண்புமிகு மக்கள்மன்ற சோகத்தை நீக்கி மகிழ்வளிக்க உழைப்பதா? இந்த சிந்தனைபெரிய பிரச்னையாகியது பட்டத்திலே அமருவோம். பகுத்தறிவு என்ற பெயரிலே பாழ்நெறி புகட்டுவோர்க்கு புத்தி புகட்டுவோம். சேவை இந்த நாட்டுக்குத்தேவை. சமயம்-மொழி—சமுதாயம் என்ற எல்லாத்துறைக்கும் சேவை தேவை. சேவை செய்வோம். என்று அவர் முடிவுகட்டினார்.

மடாதிபதி பீடத்தை நோக்கினார். முன்னை உன்மேல் அமர்ந்தவர்பலர். அவர் வாழ்ந்த வாழ்வு வேறு. நான் வாழ நினைத்துள்ள வாழ்வு வேறு என்று சொல்லிக்கொண்டே பட்டத்தரியாசனம் ஏறினார். சமுதாய சேவையில் அன்றிலிருந்து முழுமூச்சாக இறங்கி விட்டார் அவர். அந்த நேரத்திலே ஈழம் அடிகளாரை வருக

என்று வரவேற்றது. பண்பும்-அன்பும் கொஞ்ச பைந்தமிழில் பேசி மக்கள் மனமன்றத்தில் ஏறினர். ஈழத்தில் இதுவரை எந் தப்பகுத்தறிவுவாதியும் பேசிடாத-புரிந்திராத சீர்திருத்தச் செல் வங்களை அள்ளிவீசினர். மக்கள் மனமுவந்து அவைகளை ஏற்றுக் கொண்டனர்.

அடிகளார் ஒரு மதவாதி—பெரும் அரசியல் வாதி—ஏன் சிறந்த சீர்திருத்தவாதி—அவர் பெரும் புரட்சிக்காரர். அடிகளார் ஒரு கண் ணாடி. சமுதாய அறிவு என்ற முலாம் பூசிய கண்ணாடி. யார் யார் எப்படியெப்படிப் பார்த்தாலும் அவர் அப்படியெல்லாம் அவர்கட்கு காட்சி யளிக்கிறார். மதவாதிகட்கு அவர் ஒரு மதவாதி அரசியல் வாதிகட்கு அவர் ஒரு அரசியல்வாதி—சீர்திருத்தவாதிக ளும் கண்டு பிரமிக்கும் சிறந்த சீர்திருத்தவாதி,

அவர்தான் குன்றக்குடி அடிகளார். குறுநகை அடிகளார். குணத்திலே குணக்குன்று அடிகளார். பைந்தமிழ்ச் சோலையிலே பழுத்த பழம் அடிகளார். அவர் குன்றக்குடி தந்த குன்றாதகொ ள்கைக்குன்று. இன்று நாடெங்கும் காற்றெனப்பரந்து சேவை செய்கிறார். அவரதுசேவையால் நாட்டிலே நல்லவிழிப்பு ஏற்பட்டு விட்டது. சூதும் வாதும் செய்து சுய நலசேவையிலே இறங்கிய வர்கள் கூட விழித்து நல்வழி நடக்க ஆரம்பித்து விட்டனர்.

நீண்ட ஆயுளைப்பெற்று நீள் தமிழ் நாட்டுக்கு அவர் இன்னும் சேவை செய்ய வேண்டும். அவர்காட்டும் அருள்நெறிப் பாதை யிலே மக்கள் இன்னும் சாரைசாரையாக வரவேண்டும். மலேயத் திலும், ஜாவா, சுமத்ராவிலும் அவர் முழக்கம் சமீபத்திலே நடந் தது. இன்று நாடு நகரம், பட்டி தொட்டியெல்லாம்பண்புள அருள் நெறிமுழக்கம் கேட்கிறது. ஈழத்திருநாடு சர்வோதயத்தின் பெயரால் மீண்டும் அழைத்திருக்கின்றது.

பழமுதிர் சோலையை—விரைந்தோடி வரும் நாணயத்தை—விள க்கொளியை—விவேகத்தை—கொள்கையை அள்ளித்தெளிக்கும் கொ ம்புத்தேனை—யாரும் வெறுத்ததாகச் சரித்திரத்தின்எந்தப்பக்கத்திலும் பார்க்க முடியாது. வழியற்று—வகையற்றுத் தவித்த மனிதசமுதா யத்துக்கு அவர் ஒரு வழிகாட்டி. கொடுமை வெய்யலிலே தவிக் கும் மக்கட்கு அவர்குளிர் தருமரநிழல். வாழ்க குன்றக்குடி அடி களார்! வளர்க அருள் நெறி!!

# சிவகுருநாத பீட ஞானுசாரியர்
# ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்

—(சோ. பரமசாமி)—

வாழையடி வாழையாகப் பண்டு தொட்டு இன்றுவரை பல புலவர்களையும் மெய்ஞ்ஞானிகளையும் காலத்துக்குக் காலம் அளித்து வரும் பெருமையினையுடையது தமிழ்நாடு. "அறங் குன்றி, மறந் தலையெடுத்த ஞான்று புவியிலே தோன்றி மக்களின் அஞ்ஞான த்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் போதிப்பேன்" என்று கீதையில் காண்டீபனுக்குப் பகவான் கூறிய பெருமையைக் கொண்டதும் நம் தமிழ் நாட்டின் பெருமைக்கு இன்னுமோர் சிறப்பாகும். மக்கள் தம் அறியாமையைப் போக்க வேண்டுமானல், உண்மையை உணர்த்த வேண்டுமானல், ஆண்டவனை அடைவதற்கு வழிகாட்ட வேண்டுமானல் தன்னலமற்ற மெய்ஞ்ஞானிகள் தோன்றியே தீர வேண்டும்.

இந்த வகையிலே ஈழந்து யாழ்நகரும் சிறப்பு வாய்ந்ததாகும். இந் நாட்டிலே அவ்வக்காலங்களிலே ஞானிகளும் யோகிகளும் தோன்றித் தம்மைப் பிரசித்தப் படுத்தாது வாழ்ந்து வந்திருக்கின் கின்றனர். இப்பெரியார்கள் பரம்பரையிலே யாழ்ப்பாணத்துக் கந் தர்மட சிவகுருநாதபீட ஞானுசாரியராம் அருட் திரு மகாதேவசுவாமி களும் தலைசிறந்து விளங்கிய பெரியாராவர். இப்பெரியார் ஓர் சிற ந்த ஆத்மஞானி என்பதோடமையாது, குருபீடத்தின் வரன்முறை

## தமிழ்த்தென்றல் கண்ட தவத்தென்றல்

ஏனையமடாதிபதிகளைவிடக் குன்றக்குடியடிகள் மிகு தியான சேவைசெய்து வருகிறுர். அவர் என்றும் இளை ஞராய் வாழ்க! அவருடைய தொண்டுகளை—முயற்சிக ளைப்பாராட்டுகின்றேன்; அவர் தமிழ் உணர்ச்சியைப் போற்றுகின்றேன்.

"திரு. வி. க."

தவருது வந்த ஞானசாரியருமாவர். சுவாமிகளின் குருபரம்பரையை நோக்கின் காசிகானந்த தேசிகரும், அவரது மாணக்கர் சாஷன் சுவாமி என வழங்கும் சின்னத்தம்பி சுவாமிகளும், அவரது மாணக்கர் கனகரத்தினம் சுவாமிகளும், அவர்களின் மாணக்கருமாகிய பெரியாரே நாம் இங்கு கூறும் மகாதேவ சுவாமிகளாவர். சுவாமிகளின் பூர்வ நாமம் தம்பையா. சுவாமிகளைக் கடையிற்சுவாமிகள் பரம்பரை என்று கருதுவார்க்கு யாம் மேலே காட்டிய குரு பரம்பரை அவர்தம் ஐயத்தை நீக்குவதாகும்.

சுவாமிகள் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பன் என்னும் இடத்தில் அவதரித்தவர். ஆங்குள்ள சிறந்த வேளாளன் மரபிலே **திரு. நா. இராமநாதர் அவர்களுக்கும், அவரது மனைவியாய அன்ன பூரணி அம்மையார்** அவர்களுக்கும் குல விளக்காய் மெய்ஞ்ஞானத் தீபமேந்தி மேதினியில் திருவாதிரை நாள் அன்று உதயமானர்கள். சுவாமிகள் இளம் பருவத்திலேயே தமிழ் மூதுரை முதலிய கருவி நூல்களில் மிக்க வல்லுனராய் தம் ஆசிரியர்கள் மகிழும்படி நடந்து கொண்டார்கள். நாளடைவில் சமய நூல்களிலும் அதிக பற்றுடையவரானர். அதனல் பாடசாலை வாழ்க்கையை விடுத்து வாழ்க்கைச் செலவுக்கேற்ற சில வழிவகைகளைக் கையாண்டு கந்தப்புராணம் முதலிய புராணங்களைக் கிரமமாகப்பயின்று வரலானர்.

இப்பெரியார் தம் வாழ்க்கை முழுமையும் பிறர் கையை நம்பியிராது "தன் கையே தனக்குதவி" என்ற உண்மையை இறுதி வரை கையாண்டு வந்தவர். அதனல் அவர் சங்கு வேலியிலுள்ள மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்ற தனவானுக்குக் கணக்கனுகவும் இருந்தார். ஓய்வான நேரங்களை சமய நூல்கள் பயிலுவதில் செலவிடுவார். திருக்கோயில்கள் முதலிய தூய இடங்களில் கேட்போர் உள்ளங்கனியப் புராண படனஞ் செய்து வந்தார். வண்ணை தையல்நாயகி அம்மையினிடம் அதிக அன்பு உடையவர். தேவியையே உபாசன தெய்வமாகக்கொண்டவர். தமிழும் சைவமும் வளரவேண்டுமென்று பேரவா உடையராய் கரம்பனில் சண்முக வித்தியாசாலை ஒன்றை ஊரவர்கள் உதவியோடு கட்டி முடித்து ஊர்கள் தோறும் சைவவித்தியாலயங்கள் தாபிப்பதற்குச் சைவ நன்மக்களைத் தூண்டிவந்தார். கீரிமலையில் இருக்கும் வைத்திலிங்க மடம் சுவாமிகளுடைய மேற்பார்வையிலேயே கட்டப்பட்டது.

சுவாமிகள் உலக வாழ்க்கை துன்பமெனக் கண்டு மெய்ப் பொருளை உணரவேண்டுமென்ற உணர்ச்சி வெள்ளத்தில் புரளத் தொடங்கினர். அதனால் கீரிமலைக்கு வரும் பெரியார்களுடன் "நற் கனி கொள்ளவேண்டி நயந்து கல்லெறிவார் போல சற்குரு உளரோ என்று நாடுவார் தர்க்கமெல்லாம்" என்றாங்கு சற்குரு வைத் தேடும் வேணவாக் கொண்டார், தம்மை நண்ணினர்க்கு நலமளிக்கும் நாயகன், சுவாமிகள் கருத்தை நிறைவேற்றுவான் விரும்பி குருநாத வடிவமாய் கனகரத்தினம் சுவாமிகள் ஆங்கு வந்தார்கள். குருதேவரைக் கண்ணுற்ற சுவாமிகள் உள்ளம் அவரை அறியாமலேயே தாயினைக் கண்ட கன்று போல் அவரிடத்திலே அதிக அன்பு உண்டாயது. சிறிது பொழுது குருதேவரோடு உரை யாடினர். இருவரது உளமும் இரும்பிலே காந்தம் சேர்ந்தாற்போல் ஒன்றுபட்டது. சுவாமிகள் குருதேவரிடம் "அடியேன் எவ்வகைப் பொருளும் வேண்டேன். உன்னடியே தஞ்சமெனக் கொள்கின் றேன். என்பாவம் ஒழித்தல் வேண்டும்" எனக்கூறி நின்றார். சுவா மிகளின் பக்குவ நிலையைக் கண்டு குருதேவர் இவருக்கு உபதே சாதிகள் செய்து வைத்தார்கள்.

சுவாமிகள் உலக வாழ்க்கையை விடுத்து ஞான வாழ்க்கை யிலே ஈடுபடத் தொடங்கினர். சந்தியாவந்தனம், செபம், தவம், விரதங்காத்தல், ஆலயவழிபாடு தீர்த்த யாத்திரை, என்னுஞ் சத் கருமங்களை நியதியோடு ஆற்றி வந்தார். 1911-ம் ஆண்டு ஐப்ப சித்திங்கள் ஞானதீட்சை பெற்று சந்நியாசம் மேற்கொண்டார், சுவாமிகளுக்குத் திருப்பெருந்துறையில் மகாதேவர் என்ற குருநாமப் பெயரும் இடப்பட்டது,

இம்மகாதேவ சுவாமிகள் ஆச்சிரம வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கியதும், ஆச்சிரமத்தைப் பெரிதாக அமைக்கவேண்டுமெ ன்று எண்ணினர். எனவே, 1916-ம் ஆண்டு ஐப்பசித் திங்களி லேயே கந்தர்மடத்தடியில் வை, சி, சி. குமாரசாமி அவர்களால் உதவப்பட்ட காணியில் சிவ தருநாத பீடமென்னும் வேதாந்த ஆச் சிரமத்தை நிறுவினர், சுவாமிகளின் சொல்வன்மையும், சந்தேக விபரீதங்களை ஐயந்திரிபற உணர்த்தும் வன்மையும் கண்டு ஆண் பெண் இருபாலாருமாக ஆயிரக் கணக்கான மாணுக்கர்கள் கூடி னர்கள், சுவாமிகள் தம் நித்தியப் பிரம்மச்சரியத்தை சிறிதளவும்

வழுவாது காத்தவர். சுவாமிகள் வேதாந்தம், சித்தாந்தம் இரண்டிலும் நிரம்பிய ஆற்றலுடையவர், இலக்கிய அறிவும் சுவாமிகளிடம் உண்டு; அதனால் எந்த நூலையும் அவர் இகழுவது கிடையாது. அவரவர் தகுதிக்கேற்ப அவரவர் கேள்விகட்கெல்லாம் தகுந்த விடையளிப்பார். சுவாமிகள் தம் மாணாக்கர்களுக்கு மெய்ப்பொருள் உண்மைகளை விளக்குதற்குக் கையாண்ட முறைகள் நேரில் கண்டாலன்றி அவை சொல்லில் அடங்கா. சமயசம்பந்தமான பிரசங்கங்களைப் பத்திச்சுவை சொட்டச் சொட்ட சொல்லும் திறமையும் பூண்டவர்.

இஞ்ஞானசாரியரைப் பலர் தமக்குக் குருவாகக் கொண்டனர் இஞ்ஞானசாரியர்மீது கொண்ட அளவற்ற அன்பினால், சுவாமிகளின் எண்ணத்தால் கட்டப்பட்டதாய கட்டைவேலியிலுள்ள சைவப்பாடசாலைக்கு **ஞானசாரிய வித்தியாசாலை** என்று பெயரிடப்பட்டது. சுவாமிகளுடன் ஒருகால் பழகியவரும் அவரை விட்டுப்பிரிய இசையார். இவரிடம் அமைந்துள்ள மாசற்ற சொல்லும், முகத்தில் இயல்பாக விளங்கும் புன்சிரிப்போடு கூடிய தேசசும் எவரையும் வசீகரிக்கச்செய்யும் என்பதும் வியப்பன்று. தாம் பிறர்க்குப் போதித்தவற்றைத் தாமும் சாதித்து வந்தமையினால் இவர் எவராலும் பாராட்டப்பட்டு வந்தார். இப்பெரியார் எவ்வகையான படாடோபங்களும் இல்லாதவர். இப்பெரியாரது சிறப்பை 19-11-44ல் கூறவந்த இந்துசாதனம் "இவரை யொப்பதோர் புண்ணியாத்மா இனியும் இந்நாட்டில் உதிக்குமோ என எண்ணிக் கவல வேண்டியிருக்கின்றது" எனக் கூறியுள்ளது.

சுவாமி மேலே குறிப்பிட்ட சிவகுருநாதபீடம் முட்டின்றி நடப்பதற்கு வேண்டிய தென்னந்தோட்டங்கள் தேடி வைத்துள்ளார்கள். விளவேலியில் ஒரு கிளை ஸ்தாபனமும் தென்னந்தோட்டமும் அமைத்துள்ளார்கள்.

இப்பெரியார் தம் ஆயுட்காலம் முழுமையும் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அடியார்களின் அழியா வாழ்வை அமைத்தவர். எவருடனும் இதம் பேசும் இயல்புடையவர். மாவாக்கியத்தின் மாண்பைப் பலருக்கும் விளக்கியவர். அதனால் அவரது மாணாக்கர்கள்"...............

வினையிரண்டு மகலுற்றால்


தன்னது தேகான்ம புத்தி அகலப்பாசம்
தனிலொடுங்கப் பராபரமாய் முடிவாய் நாமம்
மன்னு குறி சாதிபெரு தொன்றாய் வாக்கு
மனமிறந்து நித்தியானந்தமாகிப்
பண்ணரிய விதேக கைவல் லியமேயென்னப்
பரந்தகலை சுருக்கியருள் பான்மைத்தேவே.''

எனப்பாடியுள்ளனர்.

அளப்பருந் தொண்டாற்றிய இப்பெரியார் சித்திரை பானு வருடம் ஐப்பசித்திங்கள் முப்பதாம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குச் சிவபதமெய்தினர். இஞ்ஞானசாரியாரது பிரிவு பல அன்பர்கள் உள்ளத்தை துன்புறுத்தியுமென்? ''வினைதான் முடிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்.'' என்ற வாக்கியமும் உளதாகலின் அவரது தூலதேகம் அடுத்த நாளாகிய திங்கட்கிழமை பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் மத்தியில் சமாதி செய்யப்பட்டுள்ளது.

சுவாமிகள் எல்லா மாணவர்களிடத்தும் பாரபட்சமின்றியே நடந்து வந்தார். இவரது கருத்தின் வழி நின்று சிலர் ஒழுகி வருகின்றனர். அவர்களுள் இணுவை சைவப்பெரியாரும் ஒருவராவர். இப்பொழுது சுவாமிகளின் குருபீடத்தை அடியார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் நடாத்தி வருகிறார்கள். குருநாதன் சந்நிதி என்றென்றும் வாழக் குருநாதனின் கமலபாதங்களை வழுத்துவோம்.

ஓம் தத் சத் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



[ஸ்ரீ சுவாமி ராமதாஸர் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப் பட்ட நூல்களில் "இறைவனின் திருப்பாதத்தில் (AT THE FEET OF GOD) என்பதும் ஒன்று. சுவாமிகள் தமது சந்தேகங்களை தன் தாயிடம் கேட்டு அறிவதுபோல இந்நூலில் ஒரு அத்தியாயம் அமை ந்திருக்கிறது. கடவுளைப்பற்றியும் அவரையடையும் மார்க்கத்தைப் பற்றியும் மக்களுக்குச் சாதாரணமாக எழும் சந்தேகங்களும் அவை கட்குரிய விடைகளும் இதில் அடங்கியுள்ளன. வாசகர்கட்குப் பயன் படுமென தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.]

# தாயோடு அளாவல்

I

கேள்வி:— லட்சியம் எது?

விடை:— கடவுளை அடைதல்

கே: ஆத்மார்ப்பணம் என்றால் என்ன?

வி: கடவுள் ஆணைக்குப்படிதல்.

கே: இதை அடைவதெங்ஙனம்?

வி; கடவுளை இடையறாது சிந்திப்பதால்.

கே: ராம் என்பது என்னே?

வி; அவர் அன்பு, ஒளி, ஆனந்தம், அவரே சாஸ்வதமான உண்மை.

கே; நாம் அவரை எங்கு தேடலாம்.

வி; எம் உள்ளும் எம்மைச் சுற்றியுள்ள அகிலப்பிரபஞ் சத்திலும் அவரைத்தேடிக் காணவேண்டும். இப்பிரபஞ் சமாகவே அவர்காட்சி கொடுக்கிறார். குணங்குறி அற் றதும் என்றும் உள்ளதுமான இயல்பையுடைய அந் தப் பரமாத்மனே இப்பிரபஞ்சத்தில் நாம் காணும் பல் வேறு உருவங்களாகக்கோலங்கொண்டுள்ளார். எல்லாப் பொருள்களிலும், சகல சீவராசிகளிலும் அந்த அழிவில் லாத உண்மைப்பொருளையே காண்போமாக;

கே; ஆத்மார்ப்பணத்தின் விளைவென்ன?

வி: ஆத்மார்ப்பணம் சுத்த நித்தியானந்தத்தை அளிக்கும்.

கே: எப்படி?

வி: இறைவன் சித்தத்திற்கு மனிதமனம் அடங்கியதும், கருவியின் (பக்தனின்) பொறுப்புகளெல்லாம் அற்றுப்போகின்றன. தனியகங்காரம் தெய்வீக உணர்ச்சியில் கலந்து விடுகிறது. அப்போது அவனுடைய எல்லா எண்ணங்களும், எல்லாச் செயல்களும், சொற்களும் தெய்வீகம் பொருந்தியதாகவே இருக்கும். ஆசாபாசங்களிலிருந்தும், சந்தேகங்களிலிருந்தும் அவன் விடுபடுகிறான். உண்மையில் இத்தகைய பக்தன் பேரானந்தத்தில் திளைத்திருக்கிறான். அவனுடைய மனம் சதா அதிலேதான் உறைந்திருக்கும். அகங்காரம் அற்றுப்போனபடியால் அவனுடைய எண்ணம் சொல், செயல் முதலியன பதிந்திருப்பதற்கு அங்கு இடமே இல்லை. இப்போது அவன் சகல பாவங்களிலிருந்தும் துக்கங்களிலிருந்தும் விடுதலையடைகிறான். இப்பிரபஞ்சத்தையும் அதனுற்றிருக்கும் எல்லாவற்றையும் இறைவனின் திருவிளையாடலாகக்கண்டுகளித்திருக்கும் பற்றற்ற ஆனந்த சாட்சியே அவன்.

கே: நாங்கள் கடவுளைக் காணமுடியுமா?

வி: ஆம். அவரின் செயல்களிலிருந்து அவரைக்காணமுடியும். அவர் எங்கும் வியாபித்திருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை. ஒவ்வொன்றும் அவரே யல்லால் வேறொன்றுமல்ல.

கே: கடவுள் ஒன்றென்றால் பலவித நாம ரூபங்களோடு தோற்றுவானேன்?

வி; அவரின் திருவிளையாடலை ஆற்றுவதற்கே அவர் பலவாகத் தோற்றியுள்ளார்.

கே: பலவகைத் தோற்றங்கட்கு ஆதாரம் என்ன?

வி: சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களே. இவைகளில் எந்தக்குணம் மேலிட்டிருக்கிறதோ, அதற்கேற்பப்பொருட்களின் வேறுபாடுகளுந் தோன்றும்.

# நானும் என் குருநாதரும்

(அ. இராமசாமி ஜோகூர்பாரு மலாயா.)

என்குருநாதர், சிஷ்யர்களுக்கு அருள்பாலிக்கும் விதம் சொல்கிறேன். அவரது பரிபூரண உள்ளக்கனிவை தெய்வீக அருள் சக்தியிலே கலந்து, அதைப்போதனை மூலமாகவும்; அவரது திருக்கைஎழுத்து மூலமாகவும், சக்தியை நிறைத்து கடதாசி ரூபமாக அனுப்பிவிடுகிறார். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் சிஷ்யனானவன் அந்தக் கடிதத்தைப் பெற்றதும் அவனுடைய உள்ளத்திலே அந்தச் சக்தியைனத்தும் கலந்து மிக மிக ஆச்சரியமான வேலைகளைச்செய்கிறது. தூரதேசத்திலிருக்கும் சிஷயர்அனைவரும் என் குருநாதரின் திருவடியை மனக்கண்களினால் தெரிசித்து பக்தியின் மலையிலே ஏறிக்கொண்டிருக்கின்றனர்.

என் குருநாதர் ஒரு தெய்வீகக்கருணைக்கடல், கோடாகோடி சிஷ்யர்கள் அவர்களது தியானத்தினால் என் குருநாதரின் திருவடி சக்தியை கிரகித்தாலும், கொஞ்சமும் குறைவுபடாத பக்திக்கடல். என் குருநாதரின் திருவடிக்கிணை இவ்வுலகில் யாருமில்லை.

என் குருநாதர் முதன்முதலாக எனக்கு விபூதிப் பிரசாதம் அனுப்பியிருந்தார். அதை நான் கையில் எடுத்தபோதே பக்தியின் சக்தி என் உடல் முழுதும் பரந்தது, ஆனந்தம் பொங்க நெற்றி

---

முற்பக்கத்தொடர்ச்சி

கே: கடவுளிடத்தில் நாம் பூரண சரணாகதியடைவதற்கும், இக்குணங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன?

வி: கடவுளின் ஆணைக்குதப்பூரண அர்ப்பணமாகும் நிலையில் பக்தன் முக்குணங்களையும் கடந்த தெய்வீக சம்பன்னன் ஆகிறான். எல்லாம்வல்ல இறைவனின் ஓர் கருவியாக அமைகிறான். அப்போது அவன் கடவுளின் ஆணையை நிறைவேற்றுகிறான். அதற்காகவே அவன் வாழ்விக்கப்படுகிறான். உண்மையில் கடவுளின் அவதாரங்களாகிய கிருஷ்ணர், புத்தர், கிறீஸ்து முகம்மது போன்ற மகா புருஷர்களுக்கு அவன் ஒப்பாகிறான்.

(தொடரும்)

யிலே இட்டுக்கொண்டேன். பிறகு என் உத்தியோக அலுவலாக 'பொந்தியான்ரோடு' 22வது மைலுக்கு பஸ்ஸிலே போய்க்கொண்டிருந்த சமயம், என் குருநாதருடைய பிரசாதத்தின் நினைவு வந்தது. நினைத்த மாத்திரத்தே என் கண்கள் நீரைக்கக்கின. பல பேர்களுக்கிடையே நான் இருக்கிறேன், சந்தர்ப்பம் பார்க்கவேண்டும். என்றெல்லாம் நினைத்துப்பார்க்கும்வேலை என் கண்களுக்கு ஏது? கடமையைச் செய்தன. நான் வெகு சாமர்த்தியமாகக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன்.

நான், இந்தியாவிலிருக்கும் என் மனைவியையும் தபசு இருந்து பெற்ற தாயையும் (என் குழந்தை) பிரிந்து ஜொகூர்பாருவுக்கு வந்து இரண்டு வருஷம் ஆவதற்குமுன், அடிக்கடி என் தாயை நினைக்கும்போது என் உள்ளமே உடைந்து விடும். நெக்கு நெக்கு ருகி நெஞ்சம் புண்ணுறுவதை தாங்கும் வலிமையற்றவனாய் சீ! இதென்ன வாழ்க்கை! பெற்ற குழந்தையைப்பிரிந்து வாழ்வதிலும் பிள்ளையைப் பெறுமல் இருப்பவனே சிறந்தவன் என்று நினைப்பதுண்டு. இந்த வீண் ஆசாபாசம் என் குருநாதரின் முதல் கடிதத்திலேயே செத்து விட்டது. கடமையைச் செய்வதில் மட்டும் கருத்துள்ளவனாகஇருக்கிறேன். ஆசாபாசத்தின் அடிமைப்பிடியிலிருந்து என் குருநாதர் என்னை விலக்கிவிட்டார். என்குருநாதரின் திருவடி, முதன்முதலாக ஒரு சிஷ்யனுக்கு செய்யும் அருள் அவனைப்பந்தத்திலிருந்து விடுவிப்பதே.

ஆசாபாசம் அல்லலை அதிகப்படுத்தி மனோசக்தியையும் சரீரசக்தியையும்பறித்து விடுகிறது, அன்னையை மறப்பதற்கு அருந்துணைவனாய் இருப்பவன், இந்த ஆசாபாசம் என்ற அரக்கன்தான்.

நான் ஆரம்பத்தில் பத்மாசனத்திலிருந்து தியானம் செய்யும்போது என் இடது பாதம் உணர்ச்சியற்று மரமரத்து மரக்கட்டைபோல் ஆகி விடும். அப்போது ஏதோ விபரீதமான காரியம் நடந்து விட்டதென்று பயந்து, ஆசனத்தை கலைத்துவிடுவேன், இதன் விபரத்தைக்குருநாதருக்கு எழுதிக்கேட்டதில், கொஞ்சமும் பயத்திற்கு இடமில்லை யென்றும், ஆசனத்தைக்கலைத்து கால்களை நீட்டிப்பாதத்தை மெதுவாக உருவிப்பிடித்து விட்டு மறுபடியும் செய்யலாம் என்றும் எழுதினார்கள். அதன்படியே சாதனை செய்து வருகிறேன்.

நான் இரவில் தூங்கும்போது பயங்கரச்சொப்பனம் கண்டு பயந்து அலறி, எழுந்து உட்கார்ந்து விடுவேன். சில சமயம் உட்கார்ந்துகொண்டு அலறுவேன். அப்போது என் இருதயம் படக் படக் என்று வெகுநேரம் வரை அடித்துக்கொண்டிருக்கும் இம்மாதிரி சுமார் 10 வருடகாலமாக இருந்து வந்தது. வெகுகாலமாக நான் பக்திசெய்து வந்தும், இம்மாதிரி கனவு கண்டு தவிப்பது ஏனோ? என்று என் குருநாதருக்கு விண்ணப்பித்தேன். அவர்கள் படுக்கப்போகும்போது ஜெபம் செய்து படுக்கும்படி எழுதினார்கள். நான் அவ்வாறேசெய்துவந்தேன். பயங்கரச் சொற்பனம் நாளடைவில் நின்று விட்டது.

மனிதர்களுக்கு வரும் வியாதி மூன்று வகைப்படும். 1. ஆத்மா, சரீரத்தில் குடியிருப்பதற்காக கொடுக்கும் வாடகை போன்றது. 2. செய்த தீவினைக்குத்தகுந்தவாறு துன்பம் கொடுத்து நிவாரணம் செய்விப்பது. 3. துன்பத்தை அனுபவித்து ஞானோதயம் பெற்று பக்குவம் அடைந்து அன்னையின் திருவடிசேர்வதற்காக ஏற்படுவது. இந்த மூன்றுவித வியாதிகளில் எனக்கு பெரும்பாலும் வருவது வாடகைக்கூலி கொடுப்பது போன்ற வியாதியே.

மாப்பிள்ளைபோல் தோற்றமளிப்பேன். வேதனையாக இருக்கிறதென்று சொல்வேன். டாக்டர் என்னை மேலும் கீழும் நோக்கி உடம்பைப் பிடித்துப்பார்த்துவிட்டு ஒன்றுமில்லையே என்று ஆச்சரியம் அடைவார்.

வியாதிகள் எந்தக்காரணம் பற்றியதாலுைம் என் குருநாதரிடம் முறையிட்டால் மாயமாய்ப் பறந்தோடிப்போம். பண்டைக்காலத்துப் பள்ளிப்பிள்ளைகள் செய்யும் துஷ்டத்தனம் உபாத்தியாயர் இடம் முறையிடப்போகும்போது மறைந்துவிடுவதைப்போல,

எனக்கு உடம்புக்கு முடியாமல் வரும், பொறுத்துப்பொறுத்துப்பார்ப்பேன், பொறுக்கமுடியாதபோதுஎன் குருநாதருக்கு விமானத்தபால் எழுதுவேன், கடிதத்தை தபால் பெட்டிக்குள் போட்ட மறுநாளே என் வியாதி குணமாகத் தோன்றும், நாள் ஆக ஆக நாம்

என்குருநாதருக்கு விண்ணப்பித்தோம்? என்று நினைப்பேன். என் குருநாதரிடமிருந்து கடிதம் வெகுவேகமாகப் பறந்து வரும், துஷ்டர்களை சம்ஹாரம் செய்யவரும் நாராயண சக்கரம்போல. அதில் சியவனப்பிராஸ் என்ற மருந்து வருகிறது. என்று எழுதியிருக்கும் மருந்து வந்து சேர்ந்ததும் இதை சாப்பிடுவோமா வேண்டாமா? என்று நினைப்பேன். பிறகு வியாதி இல்லை என்றாலும் என் குருநாதரின் மருந்து தேவாமிருதம் அல்லவா? இதைப்புறக்கணித்து நாம் எப்படி உயிர் வாழ்வது? என்று ஆனந்தமாகச் சாப்பிட்டு முடிப்பேன்.

என் குருநாதர் வியாதிகளுக்கும், பந்தபாசங்களுக்கும் இருதய அழுக்குகளுக்கும் யமன்.

என் குருநாதரின் திருவருள் கிடைத்ததிலிருந்து சாதனையைச் சிறப்பாகச்செய்து விட்டு, என் இஷ்ட தெய்வ அன்னையின் சக்தி, குருமூலமாக என் வாழ்விலே எவ்விதம் நிறைந்து பிரகாசிக்கிறது? என்பதைக் கூர்ந்து கவனிப்பதில் ஆவலுள்ளவனாய் இருந்து வருகிறேன்.

என் குருநாதர் முதன் முதலாக எனக்கு எழுதிய கடிதத்தில், மாதம் ஒரு முறை கடிதம் எழுதியனுப்பும்படி எழுதியிருந்தார். நான் அவருடைய கட்டுக்குள் அகப்பட்டிருக்க முடியாதவனானேன். அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்.

என் குருநாதரின் கடைக்கண் நோக்கம் என்மீது விழுந்தமாத்திரத்தே நான் பிரேமை உடையவனானேன். விளையாட ஓடும் பிள்ளையைத்தாய் பிடித்துப் பிடித்து தன் பக்கத்தில் வைப்பதுபோல் ஒரு மாதம் முடியும் வரை கடிதங்கள் என் காவலைக்கடந்து, குருநாதரை அடைந்தனபல. நான் அந்தக்கடிதங்களிலே குருநாதரே! மன்னிப்பீர்களாக' தங்கள் மீது நான் கொண்ட தீவிரபக்தியினால் உந்தப்பட்டு கடிதம் தங்களின் திருவடி சேர்கிறது, என்று எழுதினேன்,

குருநாதரிடமிருந்து வரும் கடிதம் எல்லாம் ஆங்கிலத்தில் டைப் அடித்தேவரும். ஆகலால் என் குருநாதருக்கு தமிழ் எழுதவராது போலும்! என்று எண்ணினேன். இந்தச்சந்தேகத்தை

# செய்தித்திரட்டு.

## இலங்கையில் குன்றக்குடி அடிகளார்

யாழ்ப்பாணம் பண்ணைகத்தில் காந்திய சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இரண்டாவது சர்வோதய மகாநாட்டுக்கு அடிகளார் 30-9-55இல் வந்தார்கள். மூன்று தினங்கள், சர்வோதயம், நிலப்பிரச்சனை, விவசாயம், ஆதாரக்கல்வி, பனை மகோற்சவம், மது ஒழிப்பு என்பனபற்றி அடிகளார் சமுகத்தில் ஆராய்வுகள் நடைபெற்றன,

6-10-55, 7-10-55 ஆகிய இருதினங்களிலும் கிளிநொச்சி பரந்தன், முரசுமோட்டை, வட்டக்கச்சி, உருத்திரபுரம், குமாரபுரம், வவனியா ஆதிய இடங்களுக்குத் தரிசனை கொடுத்து அடிகளார் அருளுரை வழங்கினார்கள்.

---

*முற்பக்கத்தொடர்ச்சி*

ஒரு சமயம் கடிதத்தில் காட்டினேன், எனதாருயிர் குருநாதர். அவரின் தெய்வீகத்திருக்கரத்தால், தமிழில் கடிதம் எழுதியனுப்பினார், அதைப்பார்த்ததும் என் ஆனந்தம் கரைபுரண்டது, அப்போது நான் அடைந்த இன்பம்எத்தகையது? என்று சரியாகமதிப்பிட்டுச்சொல்ல இந்த ஏழையின் சக்திக்கு ஆற்றல் போதாது,

என் குருநாதரின் கடலனைய சக்தியை, ஒரு தவளையாகிய நான் எவ்வாறு முற்றும் அறிந்து கொள்ளமுடியும்?

ஒரு நாள் பகல் ஒரு மணிக்கு கணக்கு வேலைக்கும் ஜெபத்திற்கும் போட்டி வந்து விட்டது. எதைச் செய்வதென்று தீர்மானிக்கமுடியவில்லை. ஜெபித்துக்கொண்டே கணக்கெழுதினேன். சிரமமாய் இருந்தது, அன்னையின் திருநாமத்தை மாற்றிச் சொல்லிவிட்டால் ஏஜண்ட் அவர்கள் பொறுப்பார்களா? மாட்டார்கள் அதனால் கணக்குப்புத்தகத்தைமூடிவிட்டுஜெபம் செய்து கொண்டிருந்தேன்

*ஸ்ரீகுருநாதர் திருவடி சரணம்.*

8–10–55இல் திரிகோணமலைப்பகுதியில், தம்பலகாமம் கோண நாயகர் ஆலய தரிசனம், திரிகோணமலைக்கோணேசர் ஆலய தரிசனம், சிவானந்த தபோவனம் சென்றதோடு திருவள்ளுவர் கழக ஆதரவில் பகிரங்க கூட்டம் ஒன்றும் நடை பெற்றது.

## இலங்கை அருள் நெறித்திருக்கூட்டம்.

9–10: 10–10: 11–10–55 ஆகியமூன்று தினங்களிலும் பூண்டுலோயாவைச்சேர்ந்த குப்பாவளைத் தோட்டத்தில் நடைபெற்ற சமயத்தொண்டர் பயிற்சி மகாநாட்டில் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் அருள் நெறித்திருக்கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது.

அருள் நெறி என்பது மனிதனது உடல், மன உயிர்த்தேவைகளைப் பூர்த்தி செய்து அதன்வழியே ஆண்டவன் திருவருளை அடையச்செய்வது என்பதைப் பீடிகையாகக் கொண்டு அடிகளார் அருள் நெறித் தொண்டர்களுக்கு இனியதோர் உபதேசம் அருளினார்கள்.

குன்றக்குடி ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு அருணாசலதேசிக சுவாமிகள் ஈழநாட்டுக்கு விஜயம் செய்தபோது அவர்களுடைய ஆசியோடு அருள்நெறித் திருக்கூட்டம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்றும் அதற்கு இலங்கை அருள் நெறித்திருக்கூட்டம்என்று பெயர் இடுவதென்றும் அது குன்றக்குடி அருள் நெறித்திருக்கூட்டத்தை சார்ந்ததென்றும் அதற்கென்று அலுவல் அகத்தார்களும் காரியக்குழுவும் நிர்மாணித்து அருள்நெறிக் கொள்கைகளைப்பரப்புவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பெற்றது.

கீழ்க்கண்டோர் கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்களாகத்தெரிவு செய்யப்பெற்றனர்:—

போஷகர்;-- ஸ்தாபகதலைவர் குன்றக்குடி அடிகளார்.

தலைவர்;— திரு, க. இராமச்சந்திரன்

உபதலைவர்கள்;— திருவாளர்கள்: வடிவேல் சுவாமிகள்,

பண்டிதர் பூபாலபிள்ளை, க. வேலுப்பிள்ளை, சி. வேலுப்பிள்ளை A.P.S.T. பொன்னம்பலபிள்ளை, R.M. வள்ளியப்பச்செட்டியார்

பொதுச்செயலாளர்:— திரு. க. சபா ஆனந்தர்.

உதவிச்செயலாளர்கள்:—

திருவாளர்கள்:– நா. முத்தையா, சி. க. வேலாயுதபிள்ளை

தனாதிகாரி: — திரு. க. குமாரவேல்

நிர்வாகசபை உறுப்பினர்கள் ஐம்பதின்மர் தெரிவுசெய்யப்பெற்றனர்

அருள் நெறித்திருக்கூட்டத்திட்டங்களை நிறைவேற்ற இலங்கையில் மலைநாட்டுப்பகுதியில் குன்றக்குடி ஆதீனத்திற்கு ஒரு இணைத்திருமடம் நிறுவுவது எனத்தீர்மானிக்கப்பெற்றது. இதனை நிறைவேற்றுதற்கான ஆக்கச்செயல்புரிவதற்கு கீழ்க்கண்டோரைக் கொண்ட சபை ஒன்று ஏற்படுத்தப்பெற்றது:

திருவாளர்கள்:—

க. இராமச்சந்திரன், க. குமாரவேல், க. சபா ஆனந்தர், S. கந்தையா: சி. வேலுப்பிள்ளை சி. க. வேலாயுதபிள்ளை நா: முத்தையா

9–10–55 ஞாயிற்றுக்கிழமை மாலை பூண்டுலோயாவைச்சேர்ந்த சீனித்தோட்டத்திற்கு அடிகளார் சமுகம் கொடுத்து அறிவுரை வழங்கினார்கள்.

11–10–55 பி. ப. கற்றன் ஸ்ரீபாதக்கல்லூரி தமிழ் மாணவர் கழக ஆண்டுவிழாவில் தமிழன் பெருமை பற்றி இனியதோர் சொற்பெருக்காற்றினார்கள்.

மேற்படி தினம் மாலையில் நாவலப்பிட்டி நகரத்தார் சார்பில் கதிரேசன் கல்லூரியில் நடைபெற்ற வரவேற்பில் இராமாயணதத்துவம்பற்றிப்பேசினார்கள்.

12-ம் 13-ம் தேதிகளில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அறிவுரை ஆற்றினார்கள்; 14-ம் 15-ம் 16-ம் தேதிகள் கொழும்பில்

பல இடங்களில் அடிகளாருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பெற்றன.

## நவராத்திரி

மத்திய மாகாணச் சைவமகா சபை ஆதரவில் கண்டியில் பத்துநாட்களும் உயர்திரு சுவாமி சச்சிதானந்தயோகி அவர்கள் தலைமையில் நவராத்திரி பூஜை நடைபெற்று வருகிறது. நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியிலும் அவ்வண்ணமே நடைபெற்றுவருகின்றது. இந்தியா பிரம்பூர்சத்சங்க ஆதரவில் பத்து நாட்களும் மிகப்பெரிய அளவில் திட்டங்கள் வகுத்து நடைபெற்று வருகின்றன.

## ஸ்ரீவள்ளிமலைத் திருப்புகழ்ச் சச்சிதானந்த சுவாமிகளின் ஐந்தாவது குருபூஜை.

26,27-11-55 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வள்ளிமலைபர்வத ராஜன் குன்று திருப்புகழ் ஆச்சிரமத்தில் நடைபெறும். அவ்வமயம் நடக்கும் திருப்புகழ்ப்பாராணயம், சமாதி பூஜை. அன்னதானம் முதலியவைபவங்களில் கலந்து கொள்ளுமாறு திருப்புகழ்ச்சபையார் அழைக்கின்றார்கள்.


## நாம லிகித ஜெப யாகம்

ஆரம்பத்தில் இந்த யாகத்தை 31-10-55ல் முடிப்பதாகக் கருதியிருந்தபோதிலும், அன்பர்களின் ஆர்வம் காரணமாக, அன்னையின் வெள்ளிவிழாத்தினமாகிய 29-11-55 வரையில் யாகம் நடைபெறும். அன்பர்கள் காட்டிய பக்தி சிரத்தையால் குறிக்கப்பட்ட திகதிக்கு 3 மாதம் முன்னதாகவே 25 கோடி நாமங்கள் எழுதப்பட்டு முடிந்தன. 10-9-55 வரையில் ஆச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட மந்திரங்களின் எண்ணிக்கை 274, 897, 951 ஆகும். எழுதப்பெறும் நாமங்களின் கணக்கு வெள்ளிவிழாத்தினத்துக்கு முன்னர் எடுக்கப்படவேண்டுமாதலால் கொப்பிகளை 10-11-55க்கு முன்னதாக் ஆச்சிரமத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். 10ந் திகதிக்குப் பின்னர் வந்து சேரும் கொப்பிகளும் விழாவன்று அன்னையின் திருவடியில் சமர்ப்பிக்கப்படும். ஏனைய கொப்பிகளுடன் சேர்க்கப்படும்.

முன்னர் தெரிவித்தபடி வெள்ளிவிழா மிகவும் சிறப்புடனும்பக்தியுடனும் கொண்டாடப்பெறும்' பஜனை அகண்ட நாம சங்கீர்த்தனம் பாகவத ஸ்பதகம், நாமஜெபம், வேதபாராயணம், அன்னதானம் முதலாயின முக்கிய இடம் பெறும். எல்லா அன்பர்களினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது.

# தியானநிலையில் சமாதியானார்

இராமேஸ்வரத்திலுள்ள ஆச்சிரமத்தலைவர் சுவாமி சொரூபானந்தாவின் சீஷர்களுள் ஒருவரான சுவாமி பரமானந்தர் [வெற்றிவேலு குமாரவேற்பிள்ளை] தமது 61வது வயதில் சமாதியானார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உசன் கிராமத்தைத் தாயகமாகக் கொண்டவர், அரசாங்க உத்தியோகத்தில் பலகாலம் பணியாற்றியவர், தெய்வபக்தி சமூகத்தொண்டு என்பன பிறப்புச் சொத்துக்களாக இவர்பால் அமைந்திருந்தன. இளைப்பாறும் பருவம் எய்துவதற்கு முன்னரே அரசாங்க சேவையினின்றும் இளைப்பாறிப் பாரத நாட்டுக்குச் சென்றார். அப்புண்ணிய பூமியில் சுவாமி சொரூபானந்தாவின் சீஷராக வாழ்ந்து பல புண்ணிய தீர்த்தங்களாடி சுவாமி பரமானந்தா என்ற பெயருடன் தனது தாய்நாட்டுக்கு வழிக்கொண்டார்.



சுவாமி சொரூபானந்தரிடம் சுவாமி பரமானந்தர் தீக்ஷை பெறுகிறார்

உலகப்பற்றற்ற நிலையில் செல்வச்சந்நிதியில் சுமார் ஏழு வருடங்களாக ஆங்கமைந்த மடத்தை ஒப்பற்ற ஆச்சிரமமெனக் கொண்டு பிரம்மஸ்ரீ செல்லையாக்குருக்களுடன் சமயப்பிரசாரங்கள் செய்துவந்தார். இவ்வாறாக 61ம் வயதில் தியானநிலையில் சமாதியானார்.

அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக.

---

## கிடைக்கப்பெற்றோம்

| | |
|---|---|
| தென்னிந்திய வேளாண்மை 2ம் பகுதி | ரூ. 2 |
| கமலாம்பிகை பிரபந்தங்கள் | ரூ. 1 12 அணா |
| ஸ்ரீ தியாகராஜலீலைகள் 2ம் பிரிவு | ரூ. 3 |

மேற்கூறிய நூல்கள் திருச்சி மாவட்டம் பிக்ஷாண்டார் கோவில் பண்ணையாளர் ஜீ. இராஜகோபால் பிள்ளையவர்களால் பதிப்பித்து வெளியிடப்பெற்றன, இந்த நூல்கள் இக்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் மிகப்பயன்படும் நிலையில் அமைந்துள்ளன. வேண்டுவோர் பிக்ஷாண்டார் கோவில் திருச்சிராப்பள்ளி தென்னிந்தியா என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

Regd. at the G. P. O, as News Paper, H, C 59 500

# ஜோதி நேயர்களுக்கு!

இன்றைய ஜோதியோடு ஏழாவது ஆண்டு நிறைவேறுகின்றது என்பதை மிக மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம். அன்பர்கள் யாவரும் தத்தமது சந்தாப்பணங்களை 15-11-55க்குள் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம், வருடத் தொடக்கத்திலேயே சந்தாப்பணங்களை அனுப்பிவைத்தால் ஜோதியின் நிர்வாகத்திற்குப் பேருபகாரமாய் இருக்கும். உங்கள் நண்பர்களையும் புதுவருடத்தோடு சந்தாதாரராகச் சேர்த்து உதவினால் ஜோதியை இதே சந்தாவோடு இன்னும் கூடிய பக்கங்களைக் கொண்டதாக நடத்தமுடியும்.

# அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி!

ஆத்மஜோதி அன்பர்கள் ஆத்மார்த்திகமாக எழும் சந்தேகங்களை குறித்து அனுப்பினால் அவற்றிற்கு "ஐயந்தெளிதல்" என்ற தலைப்பின்கீழ் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் மாதந்தோறும் விடை அளிக்க திருவுளம் இசைந்துள்ளார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அனுப்பப்பெறும் வினாக்கள் உண்மையிலேயே தமக்கும் பிறருக்கும் பயன்படத்தக்கனவாய் அமைந்திருத்தல் நல்லது. வினாக்கள் அனுப்பப்பெறும் ஒழுங்கு முறைப்படியே விடைகள் வெளியாகும்.

Hony. Editor, K. Ramachandran, 60, Deal Place, Colpetty
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 18-10-55